RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
## MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 220 | ஆகஸ்டு.12 2025 செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## எம்ஜிஆர், ஜெயலலிதா குறித்து விமர்சனம்: விசிக தலைவர் திருமாவளவனுக்கு ஓபிஎஸ் கண்டனம்

சென்னை: ஆக.12-

எம்ஜிஆர், ஜெயலலிதா குறித்து விசிக தலைவர் திருமாவளவன் விமர்சித்ததற்கு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்கு பிறகு, எம்ஜிஆர் அதிமுக எனும் மாபெரும் இயக்கத்தைத் தோற்றுவித்து, முதல் இடைத்தேர்தலிலேயே தனக்குள்ள மக்கள் செல்வாக்கை நிரூபித்தவர். 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று முதல்வராக பொறுப்பேற்றதுடன், தொடர்ந்து 3 முறை ஆட்சியை அமைத்து முதலமைச்சராகவே மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்குச் சென்றவர்.

சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவர் எம்ஜிஆர். அவரின் அதிமுக அனைவருக்குமான ஒரு மாபெரும் மக்கள் இயக்கம். இந்தக் கொள்கைதான், மொத்தமுள்ள 58 ஆண்டு கால திராவிட ஆட்சியில், 30 ஆண்டுகள் அதிமுக ஆட்சி அமைய வழிவகுத்தது. இப்படிப்பட்ட மக்கள் தலைவரை, திராவிட இயக்கத்தில் பார்ப்பனியத்தை ஊடுருவச் செய்தவர் என்றும், ஒரு பார்ப்பனிய பெண் திராவிட இயக்கத்தின் தலைவராக மாற பாதை வகுத்து தந்தவர் என்றும் திருமாவளவன் பேசி இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 30 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்திய பெருமைக்குரியவர் எம்ஜிஆர். 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு சட்டப் பாதுகாப்பு வாங்கிக் கொடுத்தவர் ஜெயலலிதா. அனைத்துத் தரப்பு மக்களுக்காகவும் பாடுபட்ட எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரை விமர்சிப்பது நியாயமற்ற செயல். வருகின்ற தேர்தலில், கூடுதல் தொகுதிகள் வாங்க வேண்டும் என்பதற்காகவோ அல்லது கூட்டணி அமைச்சரவையில் இடம் பெற வேண்டும் என்பதற்காகவோ, திமுகவையோ அல்லது திமுக தலைவரையோ திருமாவளவன் புகழ்ந்து பேசுவதில் யாருக்கும் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது.

அதே சமயத்தில், மக்கள் செல்வாக்கு பெற்ற, சாதி மதங்களைக் கடந்த மறைந்த தலைவர்களை விமர்சிப்பது என்பது நாகரிகமற்ற செயல். எம்ஜிஆர், ஜெயலலிதா குறித்த விமர்சனத்தை திருமாவளவன் உடனடியாக திரும்பப் பெற வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




## தேர்தல் ஆணையம் நோக்கி பேரணி; ராகுல் காந்தி உட்பட இண்டியா கூட்டணி எம்.பிக்கள் கைது!

புதுடெல்லி: ஆக.12-

வாக்காளர் பட்டியல் முறைகேடு குறித்து விசாரணை நடத்த வலியுறுத்தியும், பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் டெல்லியில் இன்று நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து இந்திய தலைமை தேர்தல் ஆணையம் நோக்கி பேரணியாக சென்ற இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் டெல்லி போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட இண்டியா கூட்டணி கட்சிகளின் எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் உள்ள மகர் துவாரிலிருந்து நிர்வாச்சன் சதனில் உள்ள தலைமை தேர்தல் ஆணைய அலுவலகத்துக்குப் பேரணியாக சென்றனர். இப்பேரணியில் சமாஜ்வாதி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ், திரிணமூல் எம்.பி மஹுவா மொய்த்ரா உள்ளிட்ட இண்டியா கூட்டணி கட்சியினர் கலந்துகொண்டனர். அவர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து செல்லும்போது, காவல்துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டனர்.

போலீசார் தடுப்புகளை அமைத்துள்ளதால், இண்டியா கூட்டணி மூத்த தலைவர்களான காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் மற்றும் என்சிபி தலைவர் சரத் பவார் உள்ளிட்டோர் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தை தொடர்கின்றனர். இன்று நடந்த பேரணியின் போது திரிணமூல் எம்.பி மிதாலி பாக் மயக்கமடைந்தார்.

பேரணியின் போது பேசிய காங்கிரஸ் எம்.பி ஜெய்ராம் ரமேஷ், “தேர்தல் ஆணையத்திடம் எங்கள் கோரிக்கையை மிகவும் தெளிவாக முன்வைக்கிறோம். நாங்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தலைமை தேர்தல் ஆணைய அலுவலகத்துக்கு அமைதியான பேரணியை நடத்தி வருகிறோம். பிஹார் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் பிற பிரச்சினைகள் குறித்து தேர்தல் ஆணையத்திடம் ஒரு குறிப்பாணையை வழங்க விரும்புகிறோம். இப்போது தேர்தல் ஆணைய அலுவலகத்துக்கு செல்வதற்கு கூட எங்களுக்கு அனுமதி இல்லை. நாடாளுமன்ற வளாகத்திற்கு முன்னால், ஜனநாயகம் படுகொலை செய்யப்படுகிறது” என்று கூறினார்.

## காவல்துறை அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே நேற்று அடையாளம் தெரியாத 6 நபர்கள் ஒரு காரில் சிறுமியை கடத்தியதாகவும் சிவகங்கை பேருந்து நிலையத்திற்கு அருகே வரும்பொழுது காரில் இருந்து குதித்து தப்பித்ததாகவும் செய்தி வெளியானது சிவகங்கை காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் சிசிடிவி மற்றும் விரிவான விசாரணையில் அவ்வாறு எந்த சம்பவம் நடைபெறவில்லை காவல்துறையினரின் விளக்கத்தை பெறாமல் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளிவந்த செய்தி உண்மைக்கு புறமானது என சிவகங்கை மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# 2026 தேர்தலின்போது மேற்கு மண்டலத்தில் இருந்து தான் அதிமுகவின் தோல்வி தொடங்கும்: ஸ்டாலின்

திருப்பூர்: ஆக.12-

2026 சட்டப்பேரவை தேர்தலில் அதிமுகவின் தோல்வி மேற்கு மண்டலத்தில் இருந்து தான் தொடங்க உள்ளது என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், உடுமலை, நேதாஜி மைதானத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. ஆட்சியர் மணீஸ் நாரணவரே வரவேற்றார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மாவட்ட நிர்வாகம் சார்பில் முதல்வருக்கு நினைவு பரிசினை வழங்கினார். உடன் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் சு.முத்துசாமி, உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.





இந்த விழாவில் ரூ.949 கோடியே 53 லட்சத்தில் 61 முடிவுற்ற பணிகள் திறப்பும், ரூ.182 கோடியே 6 லட்சத்தில், 35 புதிய திட்டப் பணிகளுக்களுக்கான அடிக்கல் நாட்டுதல், ரூ.295 கோடியே 29 லட்சத்தில் 19,785 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நலத்திட்டங்களை வழங்கியும், திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: சினிமா துறையில் 10,000 பாடல்களை எழுதிய கவிராயர் உடுமலை நாராயணகவி, அரசு கலைக் கல்லூரி அமைய காரணமாக இருந்த திமுக முன்னாள் அமைச்சர் சாதிக்பாட்ஷா உள்ளிட்டோரை தந்தது உடுமலை மண். இயற்கை, இலக்கியம், கல்வி, அரசியல் என பல துறைகளிலும் கோட்டையாக உடுமலைப்பேட்டை இருந்து வருகிறது.

திமுக ஆட்சி காலங்களில் தான் மேற்கு மண்டலத்துக்கான பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி மேற்கு மண்டலத்தை சேர்ந்தவர் என தன்னை காட்டிக்கொண்டபோதும், அதிமுக ஆட்சிக் காலத்தில் எந்த திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. ஆனால் திராவிட மாடல் அரசு இப்பகுதிக்கான வளர்ச்சி திட்டங்களை தொடர்ந்து செய்யும். 2026 தேர்தல், நிச்சயமாக அதிமுகவின் தேர்தல் தோல்வி மேற்கு மண்டலத்தில் இருந்து தான் தொடங்கப் போகிறது.

உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மக்கள் நலத்திட்டத்திற்கு தடைவிதிக்க நீதிமன்றம் சென்றனர். நீதிமன்றம் சிவி சண்முகத்துக்கு ரூ.10 லட்சம் அபராதம் விதித்து, நீதிமன்றங்களை அரசியல் மேடையாக ஆக்காதீர்கள் என கூறியது. இது அவர்களுக்கு கேவலமாக இல்லையா? அதிமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாஜக அரசு அளித்துள்ள பட்டியல்படி முன்னேறிய மாநிலங்களில் தமிழகம் முன்னோடியாக திகழ்கிறது.

என்னை பொருத்தவரை பேச்சைக் குறைத்துக்கொண்டு செயலில் காட்ட வேண்டும். அந்த வகையில் பிஏபி பாசன விவசாயிகளின் கோரிக்கையான நீரார் நல்லார் அணைத்திட்டம் விரைந்து செயல்படுத்தப்படும். இது தொடர்பாக ஏற்கெனவே கேரளா, தமிழகம் ஆகிய இரு மாநில அரசு துறைகள் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

பிஏபி திட்டத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள பாசன கால்வாய்களை தூர் வார இந்த ஆண்டே ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். திருப்பூர் மாநகரில், ரூ.9 கோடி செலவில் நவீன வசதிகளுடன் கூடிய நூலகம், ரூ.5 கோடி செலவில் பல்நோக்கு விளையாட்டரங்கம், காங்கயம் பகுதியில் குடிநீர் வடிகால் பணிகளுக்காக ரூ. 11 கோடி, தாராபுரம் அருகே உப்பாற்றின் குறுக்கே ரூ.7.5 கோடியில் தடுப்பணை, ஊத்துக்குளியில் ரூ.6.5 கோடி செலவில் வெண்ணெய் தொழிற்சாலை, உடுமலையைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் சாதிக்பாட்ஷா பெயர், பைபாஸ் சாலைக்கு சூட்டப்படும்.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை செயல்படுத்த வல்லுநர் குழு அமைக்கப்பட்டு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

இதையடுத்து உடுமலை நகர கட்சி அலுவலகத்தின் புதிய கட்டிடத்தை திறந்து வைத்த பின் பொள்ளாச்சிக்கு கிளம்பி சென்றார். முன்னதாக தான் தங்கியிருந்த இல்லத்தில் இருந்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வேனில் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், உடுமலை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து விழா நடைபெறும் நேதாஜி மைதானம் வரை சுமார் 1 கி.மீ., தொலைவுக்கு நடைபெற்ற ரோடு ஷோ நிகழ்வில் பங்கேற்றார். அப்போது வேனை விட்டு இறங்கிய அவர் அங்கிருந்து சாலையில் இருபுறமும் திரண்டிருந்த பொதுமக்கள், கட்சி தொண்டர்கள் இடையே வணக்கம் தெரிவித்தப்படி நடந்து வந்தார்.

விழாவில் 10,000 த்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர். மாவட்டம் முழுவதும் இருந்து வரவழைக்கப்பட்டிருந்த பயனாளிகள் பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாகனங்களில் அழைத்து வரப்பட்டிருந்தனர். பயனாளிகள் வந்த வாகனங்கள் வந்து செல்ல மத்திய பேருந்து நிலையத்தில் இடவசதி செய்து தரப்பட்டிருந்தது.

அதனால் மத்திய பேருந்து நிலையத்துக்கு வரும் உள்ளூர், வெளியூர் பேருந்துகள், தாராபுரம் சாலையில் உள்ள சிவசக்தி காலனியில் கோயிலுக்கு சொந்தமான காலியிடத்தில் நின்று செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கிருந்து நகருக்குள் செல்ல சுமார் 2 கிமீ தொலைவுக்கு பொதுமக்கள், பள்ளி மாணவ,மாணவிகள் நடந்து செல்ல நேரிட்டது.

முதல்வர் வருகையை முன்னிட்டு தனியார் பள்ளிகளுக்கு அறிவிக்கப்படாத விடுமுறை விடப்பட்டது. பெரும்பாலான பள்ளி வாகனங்கள் பயனாளிகள் வந்து செல்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. ரோடு ஷோ குறித்த முன் அறிவிப்பு இல்லாமல் காலையில் திடீரென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனால் சில இடங்களில் மக்கள் கூட்டம் இன்றி சாலை வெறிச்சோடி காணப்பட்டது.

## சென்னையில் பருவமழை திட்டப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்: அதிகாரிகளுக்கு தலைமைச் செயலர் அறிவுறுத்தல்

சென்னை: ஆக.12-

வடகிழக்கு பருவமழையையொட்டி, சென்னையில் 4 துறைகள் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்து, அவற்றை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு தலைமைச் செயலர் நா. முருகானந்தம் அறிவுறுத்தினார்.

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, சோழிங்கநல்லூர் வட்டம், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நீர்வளத்துறை சார்பில் வெள்ளத்தை தணிப்பதற்காக தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயிலிருந்து கடல் வரை நேரடியாக ரூ.91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெருமூடிய கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதேபோல், ஒக்கியம் மடுவில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் விரிவான மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள், பள்ளிக்கரணை அணை ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை ரூ.57.70 கோடி மதிப்பீட்டில் மூடிய பெருவடிகால்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளை தலைமைச் செயலர் நேற்று முன்தினம் நேரில் ஆய்வு செய்தார்.



கும்மிடிப்பூண்டி தோப்பு சாலையில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.145 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர் மட்ட பாலம்கட்டும் பணியையும் அவர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் போக்குவரத்துக்கும் மக்களுக்கும் இடையூறின்றி பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளவும், உரிய காலத்தில் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அலுவலர்களை அவர் அறிவுறுத்தினார்.

இதேபோல், அடையாறு கிரீன் வேஸ் சாலையில் சென்னை குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை தலைமைச் செயலர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாநகராட்சி சார்பில் சோழிங்கநல்லூர் மண்டலத்தில் உள்ள 42 ஏக்கர் பரப்பளவிலான ராமன் தாங்கல் ஏரியில் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைக்கும் பணியையும் தலைமைச் செயலர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் ஆகாயத்தாமரை அகற்றுதல், பறவைகளுக்கான தீவுகள் அமைத்தல், 10,500 மரங்கள் நடுதல், சூரிய சக்தியில் இயங்கும் நீரூற்று, நடைபாதை, மின்விளக்கு வசதி, சுற்றிலும் வேலி அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பின்னர், அடையாறு மண்டலம், கிண்டி ரேஸ் கோர்ஸ் கிளப் வளாகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 4 குளங்களின் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வுகளின்போது, நெடுஞ்சாலைத் துறைச் செயலர் ஆர்.செல்வராஜ், நீர்வளத் துறை செயலர் ஜெயகாந்தன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவன மேலாண் இயக்குநர் பாஸ்கர பாண்டியன், சென்னை குடிநீர் வாரிய மேலாண் இயக்கநர் டி.ஜி.வினய் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



## கன்னியாகுமரி மாவட்டம் வில்லுசாரி மலைவாழ் மக்களின் அடிப்படை தேவைகள் குறித்து பழங்குடியின மக்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, சந்திப்பு

கன்னியாகுமரி, ஆக.12-

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டம் பொன்மனை பேரூராட்சிக்குட்பட்ட வில்லுசாரி மலைபகுதியில் உள்ள மலைவாழ் பழங்குடியின மக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தக்ஷஆர். அழகுமீனா, நேரில் சந்தித்து, கலந்துரையாடி தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்களும் நலத்திட்ட உதவிகளும் கடைகோடி மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் பல்வேறு முன்னெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



அதன்ஒருபகுதியாக கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டம் பொன்மனை பேருராட்சிக்குட்பட்ட வில்லுசாரி பகுதிகளில் வாழும் பழங்குடியினர்களுக்கு வன உரிமை பட்டா வழங்குவது தொடர்பாக அந்தப்பகுதி மக்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்து, அதற்கு தீர்வு காணும் வகையில் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வன உரிமை சட்டத்தின் கீழ் நில உரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் வன உரிமை சட்டத்தின் கீழ் அவரவர் கைவச அனுபவத்தில் இருக்கும் நிலங்களுக்கான தனி மனித உரிமைப் பட்டா குடும்பத்திற்கு 10 ஏக்கருக்கு மிகாமல் வழங்கிடுவது தொடர்பாக கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள வன உரிமைக் குழு மற்றும் கிராம சபாக்களால் மேற்கொள்ளப் பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்திட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தப்பட்டது.

கிராமங்களில் வசித்து வரும் பழங்குடி மக்களிடமிருந்து தனி மனித நில உரிமைப் பட்டாவிற்கான முறையீடுகளை விடுதலின்றி பெற்று வரைப்படங்களுடன் ஒப்பீடு செய்தும் முறையீடுகளை கூராய்வு செய்தும் கிராம சபா தீர்மானம் நிறைவேற்றி கோட்ட அளவிலான குழுவிற்கு விரைவில் அனுப்பி வைத்திடக் கேட்டுக்கொள்ளப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வன உரிமை சட்டத்தின் கீழ் தகுதியுள்ள அனைத்து மலை வாழ் பழங்குடியின மக்களுக்கும் தனி மனித நில உரிமைப்பட்டா வழங்குவது தொடர்பாக பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் பட்டா வழங்கப்படும் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் .வினய்குமார் மீனா, தனி வட்டாட்சியர் திருவாழி, பொன்மனை பேரூராட்சி செயல் அலுவலர், வனத்துறை அலுவலர்கள், வன உரிமைச் சட்ட கோட்ட மற்றும் மாவட்ட அளவிலான உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## தென்காசி திருமதி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, ஆக.12-

தென்காசி திருமதி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாள் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், துவக்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்டத்தில் இன்றைய தினம் தேசிய குடற்புழு நீக்க நாள் முகாம் சிறப்பாக நடை பெற்று வருகிறது. பள்ளி செல்லாத குழந்தைகளுக்கும், 20 வயது முதல் 30 வயது வரை உள்ள பேறுசார் அல்லாத மகளிருக்கும், அங்கன்வாடி மையம் மற்றும் துணை சுகாதார நிலையத்தில் வைத்து மாத்திரை வழங்கப்படும். 1 வயது முதல் 19 வயது வரையிலான 3,08,483 நபர்கள், 20 வயது முதல் 30 வயது வரையிலான 68,595 நபர்களுக்கும் என மொத்தம் 3,77,078 நபர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

விடுபட்ட குழந்தைகளுக்கு (18.08.2025) திங்கள்கிழமை அன்று மாத்திரை வழங்கப்பட உள்ளது. மேலும், 1 முதல் 2 வயதிற் குட்பட்ட குழந்தைகளுக்கு அரை மாத்தி ரையும், 2 வயது முதல் 19 வயதிலானவர்கள் மற்றும் 20 30 வயது வரையிலான மகளிர்களுக்கு 1 மாத்திரையும் வழங்கப்படும். குடற்புழுவால் ஏற்படும் இரத்த சோகையை தடுக்கவும், நோய் எதிர்ப்பு சக்தி, அறிவுத் திறன், உடற் வளர்ச்சி மேம்படவும், ஆரோக்கியமாக இருக்கவும் இம்மாத்திரை உதவுகிறது.

எனவே, முகாம்களில் தங்களது குழந்தைகள், பள்ளி மாணவ, மாணவியர்கள், மகளிரை அழைத்து வந்து மாத்திரைகள் பெற்றுக்கொள்ளலாம்,

இம்முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல் கிஷோர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாணவியர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் மற்றும் சுகாதார பணியாளர்கள் அனைவரும் தேசிய குடற்புழு நீக்க நாள் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர் மருத்துவர் விஜயலட்சுமி, மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் கோவிந்தன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மாவட்ட அலுவலர் திரு.முத்து மாரியப்பன், வடகரை வட்டார மருத்துவ அலுவலர் மருத்துவர் சுந்தராம்பாள், திருமதி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி அன்புமணி மற்றும் சுகாதாரத்துறை பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டம் லட்சுமிபுரம் அரசு அரசு மேல்நிலைப் பள்ளியில் போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் பள்ளி மாணவர்கள் ஏற்றுக்கொண்டனர்

தேனி, ஆக.12-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் .உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (11.08.2025) சென்னை நந்தனம் அரசுக்கல்லூரியிலிருந்து ''போதைப்பொருட்கள் இல்லா தமிழ்நாடு'' மாநில அளவிலான பெருந்திரல் உறுதிமொழி ஏற்கும் நிகழ்வினை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தேனி மாவட்டம், லட்சுமிபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹா ப்ரியா, இ.கா.ப., அவர்கள் மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.சரவணக்குமார் அவர்கள் முன்னிலையில் பள்ளி மாணவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாட்டினை உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கத்தில் போதைப்பொருட்களை முற்றிலும் ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்தவகையில், தேனி மாவட்டத்தில், போதைப் பொருட்களை ஒழித்திடும் விதமாக பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களிடையே போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணிகள், தெருக்கூத்துகள், விழிப்புணர்வு நாடகங்கள் மற்றும் பல்வேறு விதமான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொதுஇடங்களில் விளம்பர பதாகைகள் வைத்தும், பொதுமக்களுக்கு துண்டுபிரசுரங்கள் வழங்கியும் விழிப்பு ணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாரந்தோறும் திங்கட் கிழமை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் போதைப் பொருள் தடுப்புக்குழு ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டும், கிராம அளவில் கிராம நிர்வாக அலுவலர்கள் தலைமையில் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மருந்தகங்களில் தடைசெய்யப்பட்ட மருந்துகளை விற்பனை செய்வதை தடுக்கவும், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், தடை செய்யப்பட்ட மதுபானங்கள் மற்றும் போதைப் பொருட்களை ஆம்னி பேருந்துகளில் எடுத்து செல்வதை தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2024ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச் சட்டம் பிரிவு 5ஏ இன் படி தமிழக அரசால் உரிமம் வழங்கப்பட்டுள்ள இடங்களை தவிர்த்து மது அருந்துதல் மற்றும் மதுபானங்கள் விற்பனை செய்தல் தடைசெய்யப் பட்டுள்ளது. விதிமீறல்கள் கண்டறிய ப்பட்டால் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



தேனி மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜீலை மாதம் இறுதி வரை காவல்துறையினரால் 255.579 கிலோ கிராம் கஞ்சா மற்றும் 163 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டு 271 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். தடைசெய்யப்பட்ட புகையிலை விற்பனையை தடுக்க உணவு பாதுகாப்புத்துறை, காவல்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள 23,060 கடைகள் மற்றும் இதர இடங்களில் உள்ள 17,778 கடைகளில் கூட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நடத்தப்பட்ட ஆய்வுகளில் தற்போது வரை 296 கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டு, ரூ.75,25,000/ அபராதம் விதிக்கப்பட்டு, சுமார் 2042.864 கிலோ கிராம் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு 305 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்றையதினம் லட்சுமிபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில், போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழியான, போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீயவிளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும், எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து, அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து, அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப்பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், காவல்துறையினர் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் பெரியகுளம் சார் ஆட்சியர் திரு.ரஜத்பீடன், இ.ஆ.ப., மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் / சார்பு நீதிபதி திருமதி பரமேஸ்வரி, துணை காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு) திரு.சீராளன், உதவி ஆணையர் (கலால்) திருமதி முத்துலெட்சுமி, மாவட்ட நியமன அலுவலர் (உணவு பாதுகாப்புத்துறை) மரு. சசிதீபா, வட்டாட்சியர் திரு.மருதுபாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி புவனேஷ்வரி, திரு.ராகவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, ஆக.12-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார் .

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 432 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தண்டபாணி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.முத்துராமலிங்கம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியாவின் வளர்ச்சியால் பொறாமை: வெங்கையா நாயுடு கருத்து



சென்னை, ஆக.12-

எம்.எஸ். சுவாமிநாதன் நூற்றாண்டு சர்வதேச கருத்தரங்கில் உரையாற்றிய முன்னாள் குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு பேசியதாவது: இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து உலகம் முழுவதும் அங்கீகாரத்தை பெற்று வருகிறது. இந்தியாவின் வளர்ச்சி சில நாடுகளுக்கு பொறாமையை ஏற்படுத்தியுள்ளது. நமது வளர்ச்சியை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

அஜீரணப் பிரச்சினையால் அவர்கள் அவதிப்படுகின்றனர். உலக பொருளாதாரத்தில் இந்தியா 4வது இடத்தில் இருந்து 3வது இடத்துக்கு முன்னேறி வருகிறது. விவசாயிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இளைஞர்களின் பங்களிப்பால் நம்நாடு நிச்சயம் மேலும் வளர்ச்சியடையும். இவ்வாறு வெங்கையா நாயுடு கூறினார்.



## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், ஆக.12-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 286 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித் தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி. கிருஷ்ணகுமாரி அவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செல்வி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் பெற்றுக் கொண்டார்.

# தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா உள்ளிட்டோர் கல்லூரி மாணவ மாணவியர்களுடன் போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்

கன்னியாகுமரி, ஆக.12-

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சென்னை நந்தனம் அரசு கலைக் கல்லூரி கலையரங்கில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் நடைபெற்ற “போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” என்ற மையக்கருத்தினை வலியுறுத்தி, மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் காணொலி காட்சிய வாயிலாக நடைபெற்ற போதைப்பொருட்கள் இல்லா தமிழ்நாடு உறுதிமொழி யினை கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.ஸ்டாலின், உள்ளிட்டோர் கலந்து கொண்டு, மாணவ மாணவியர்களுடன் உறுதிெ மாழியினை ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் கலந்துகொண்டு, கல்லூரி மாணவ மாணவியர் களிடையே பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் போதைப்பொருளற்ற சமுதாயம் அமைத்திடவும், சமூகத்தில் போதைப்பொருட்களுக்கு எதிரான கல்வியையும், விழிப்புணர்வையும் வழங்கி போதை ப்பொருள் பழக்கத்திற்கு யாரும் அடிமையாகாமல் தடுத்திடும் வகையில் தமிழ்நாடு முழுவதும் போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி எடுத்திடவும், பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் பொது இடங்களில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்திடவும் அறிவுறுத்தியதன் அடிப்படையில் “போதைப் பொருட்கள் இல்லா தமிழ்நாடு” விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியின் நோக்கம் தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைவரும், குறிப்பாக மாணவ மாணவியர்கள், இளைஞர்கள் போதைப்பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுப்பதேயாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நாளிலிருந்து போதைப்பொருட்களுக்கு எதிரான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக ”போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” என்ற தலைப்பில் மாநாடு நடத்தப்பட்டது. இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

போதைப்பொருள்களுக்கு அடிமையாகின்ற ஒவ்வொருவரும் ஒரே ஒரு தடவை, இன்று ஒரு நாள் மட்டும் என்று எதார்த்தமாகவோ, வற்புறுத்தப்பட்டோ போதை பொருட்களை உபயோகிப்




பதினால் போதைக்குள்ளேயே சிக்கிக் கொள்ளும் நிலைக்கு ஆளாகி விடுகிறார்கள். மாணவர்களின் எதிர்காலத்தை பாழாக்கக்கூடிய போதைப் பொருட்களை எந்த விதத்திலும் எடுத்துக்கொள்ள மாணவர்கள் தங்களை அனுமதிக்க கூடாது.

தொடர்ந்து போதை யில்லா குமரி மாவட்டத்தினை உருவாக்கிட உணவு பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்கள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் உள்ளிட்டவர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுக்கள் மாவட்டம் முழுவதும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் இதர பகுதிகளில் ஆய்வு செய்து தடை செய்யப்பட்ட புகையிலை கலந்த உணவுப்பொருட்களான பான்மசாலா, குட்கா, Cool Lip மற்றும் மெல்லும் வாய் புகையிலை முதலியன விற்பனை செய்யப்படுகிறதா என ஆய்வு மேற்கொண்டு வருகிறது. மேலும் தடை செய்யப்பட்ட புகையிலை கலந்த உணவு பொருட்களான பான்மசாலா, குட்கா, Cool Lip மற்றும் மெல்லும் வாய் புகையிலை ஆகியவற்றை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் அவர்களின் கடைகள் முதல் முறை என்றால் உரிமம் ரத்து செய்யப்பட்டு 15 நாட்கள் மூடி முத்திரை யிடப்பட்டு, பின்னர் தலா ரூ.25000/ வீதம் அபராதம் விதிக்கப்படும்.

மேலும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை மாணவர் எவரேனும் பயன்படுத்தும் பட்சத்தில், அது சார்ந்த தகவல்களை ஆசிரியர் மூலமாக மாணவர்களாகிய நீங்கள் தெரிவிக்கவேண்டும். இன்றைய காலகட்டத்தில் மாணவர்களின் கற்றலை பின் தள்ளுவதற்கான காரணிகளில் புகையிலை பொருள்களும் ஒன்றாக உள்ளது. போதைப் பொருட்களை முற்றிலும் களைவதற்காக, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து புகையிலை பொருட்களின் பயன்பாடு மற்றும் அவற்றை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு குறும்படம் தயாரித்தல், போதைப்பொருட்கள் விற்போரை கண்டறிந்து தடுத்தல் முதலிய முயற்சிகள் பல்வேறு துறைகளின் கூட்டு முயற்சியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், புகையிலை தடுப்பு பிரிவு மருத்துவரால் போதைப்பொருட்கள் பயன்பாடுகள் குறித்த தீமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளி, கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் போதைப்பொருள்கள் உபயோகிப்பதினால் ஏற்படும் விளைவுகள் குறித்து மாணவ, மாணவியர்களுக்கு நல் ஆலோசனை வழங்க வேண்டும். நமது மாவட்டத்தில் இப்போதைப்பொருள் பயன்படுத்துவதை ஒழித்திடும் வகையிலும், போதைப்பொருள்களுக்கு அடிமையான நபர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கி, சிகிச்சைக்கு பின் அவர்களை தொடர்ந்து கண்காணிக்கவும், பராமரிக்கவும் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தலின்படி இம்முகாமில் கலந்து கொண்ட அனைத்து தன்னார்வலர்கள் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்வதோடு, இளம் சமூகத்தினர் மீது பெரும் மதிப்பு கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தினை நிறைவேற்றும் வகையில் பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் போதை பொருள் பழக்கத்திற்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரி வித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாநில அளவில் தேர்வு செயல்பட்ட போதை ஒழிப்பு தன்னார்வ குழுக்களுக்கு ரூ.50,000 க்கான காசோலை மற்றும் கோப்பை வழங்கினார்கள். இதில் நமது மாவட்டம் கல்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி இடம் பெற்று ரூ.50,000க்கான காசோலை மற்றும் கோப்பைகளை பெற்றுள்ளனர். பரிசு பெற்ற அரசு பள்ளி மாணவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் பாராட்டினார்கள்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து, மாணவ மாணவியர்களிடையே எல்.இ.டி மூலமாக விளக்கி கூறினார்கள்.

முன்னதாக பொன் ஜெஸ்லி பொறியியல் கல்லூரி மாணவர்களின் போதைப் பொருட்களுக்கு எதிரான உடலியல் மொழி மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்படுத்தப்பட்டது.

நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு உணவு ஆணையத்தின் தலைவர் திரு.என்.சுரேஷ் ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ.பாலசுப்பிரமணியம், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப., உதவி ஆட்சியர் பயிற்சி திரு.ராகுல்குமார், இ.ஆ.ப., நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, உதவி ஆணையர் (கலால்) திரு.ஈஸ்வரநாதன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.பாலதண்டாயுதபாணி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி, மாவட்ட நியமன அலுவலர் மரு.ஜெயராமபாண்டியன், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் திருமதி. சகிலா பானு, துணை காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு(பொ)) திரு.கண்ணதாசன், பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஜி.நடராஜன், நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் திருமதி.மேரி பிரின்சி லதா, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு.கந்தசாமி, மண்டல தலைவர் திரு.செல்வகுமார், பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள், அலுவலர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அதனை தொடர்ந்து மதுரை அமெரிக்கன் கல்லூரியில் கூட்டரங்கில் போதைப்பொருள் எதிர்ப்பு தொடர்பான பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி கல்லூரி மாணவமாணவிகள், தன்னார்வலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் இன்று (1182025) பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். மாநகராட்சி மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், மாநகர காவல் ஆணையர் திரு.லோகநாதன் இ.கா.ப. அவர்கள், காவல்துறை துணைத் தலைவர்(மதுரை சரகம்) முனைவர்.அபினவ் குமார் இ.கா.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அரவிந்த் இ.கா.ப., அவர்கள், மாநகராட்சி துணை மேயர் திரு.நாகராஜன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

திறன் மிகு வகுப்பறைகள் மற்றும் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ள பள்ளிகளுக்கு

## இணையதள சேவை விரைவில் வழங்குவது குறித்த மீளாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை, ஆக.12-

சிவகங்கை மாவட்டத்தில் திறன் மிகு வகுப்பறைகள் மற்றும் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ள பள்ளிகளுக்கு இணையதள சேவை விரைவில் வழங்குவது குறித்த மீளாய்வு கூட்டம், மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டத்தில் 930 பள்ளிகள் இணைதள சேவை வழங்க தகுதியுள்ள பள்ளிகளாகும். அதில், பிஎஸ் என்எல் இணைப்பானது 535 பள்ளிகளில் வழங்கப்பட்டுள்ளது. 196 பள்ளிகளில் தனியார் நிறுவனங்கள் மூலம் இணைய சேவை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 199 பள்ளிகளுக்கு இணைய சேவை வழங்குவதில் தகுந்த சூழல் இல்லாததாக தெரிய வருகிறது. ஏற்கனவே பிஎஸ்என்எல் இணையதள சேவை வழங்கப்பட்டுள்ள 535 பள்ளிகளிலும் அவை முழுமையாக இயங்குகிறதா என்பதை வட்டாரக்கல்வி அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

மேலும், தனியார் மூலம் இணையதள சேவை வழங்கப்பட்டுள்ள 196 பள்ளிகளிலும் பிஎஸ்என்எல் மூலமாக இணையதள சேவை வழங்கப்பட வேண்டும்.

ஏற்கனவே, இணையதள சேவை வழங்குவதில் தகுந்த சூழல் இல்லாத பள்ளிகள் என அடையாளம் காணப்பட்டுள்ள பள்ளிகளில், தற்போது எந்தெந்த பள்ளிகளுக்கு சாத்தியம் உள்ளதோ அவைகளுக்கு விரைவில் இணையைதள சேவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், ஆகஸ்ட் 14 அன்று செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆன்லைன் கருவிகள் பற்றிய ரோபோ அறிவுக்கான தமிழ்நாடு பள்ளித் திட்டம் (TN SPARK) என்ற திட்டமானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. இதற்காக சிவகங்கை மாவட்டத்தில் 51 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதில், 41 பள்ளிகளுக்கு இணையதள சேவை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பள்ளிகளுக்கு ஒரு வார காலத்திற்குள் இணையதள சேவை வழங்கிட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளபட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்(பொ) திரு.மாரிமுத்து, மாவட்ட கல்வி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர், வட்டாரக் கல்வி அலுவ லர்கள், மேற்பார்வையாளர்கள், பிஎஸ்என்எல் அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணை ப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை நந்தனம் அரசு கலைக்கல்லூயில் காணொளிக்காட்சியின் மூலம் போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சி நடைபெற்றதையொட்டி, இராமநாதபுரம் மாவட்டம், செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கல்லூரி மற்றும் மாணவ, மாணவிகள் பங்கேற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சி நடை நடைபெற்றது. உடன் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.பாலச்சந்தர் அவர்கள், இராமநாதபுரம் நகர்மன்ற தலைவர் திரு.ஆர்.கே.கார்மேகம் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

“உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 13.8.2025 அன்று

## திருப்பத்தூர் பேரூராட்சி, தேவகோட்டை, சாக்கோட்டை, சிங்கம்புணரி, இளையான்குடி, சிவகங்கை ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஆக.12-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஆகஸ்ட் 13 ஆம் தேதி திருப்பத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 6 முதல் 12 வரை உள்ள பகுதிகளுக்கென திருப்பத்தூர் சன்மீனாள் திருமண மண்டபத்திலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இலங்குடி, பனங்குளம், மாவிடுதிக்கோட்டை, சக்கந்தி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென சக்கந்தி ஊராட்சியிலுள்ள சமுதாயக்கூடத்திலும், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஜெயங்கொண்டான், மித்ராவயல், பிரம்புவயல் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென மித்ராவயல் ஊராட்சியிலுள்ள சமுதாயக்கூடத்திலும், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எஸ்.மாத்தூர், எஸ்.எஸ்.கோட்டை, சேவல்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென எஸ்.எஸ்.கோட்டை ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும்,

இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டையூர், ஆழிமதுரை, கே.இடையவலசை ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென கோட் டையூர் ஊராட்சியிலுள்ள சமுதாயக்கூடத்திலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட படமாத்தூர், கண்ணாரியிருப்பு, மாத்தூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென படமாத்தூர் ஊராட்சியிலுள்ள சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், ”உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது. இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம். எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



■ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சியை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டார்.



# தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி நடத்திய போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி

தேவகோட்டை, ஆக.12-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் உடற்கல்வித்துறை இணைந்து நடத்திய போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் நாவுக்கரசு துவக்கி வைத்தார் மாரத்தான் போட்டியானது அமராவதி புதூரில் இருந்து தேவகோட்டை தியாகிகள் பூங்கா வரை நடைபெற்றது. போட்டியில் முதல் பரிசைப் பெற்ற மூன்றாம் ஆண்டு வணிக மேலாண்மை மாணவர் ராமச்சந்திரன் ரூபாய் 5000, இரண்டாம் பரிசைப் பெற்ற மூன்றாம் ஆண்டு இளங்கலை இயற்பியல் மாணவர் கைலாசகுமார் ரூபாய் 3000 மூன்றாம் பரிசைப் பெற்ற முதலாம் ஆண்டு வணிக மேலாண்மை மாணவர் மெல்வின் ரீபேக் மற்றும் முதலாம் ஆண்டு தமிழ் மாணவர் சந்தோஷ் ரூபாய் 2000 வழங்கப்பட்டது. போட்டியின் இறுதியில் அனைத்து மாணவர்களும் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். மாரத்தான் போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் மூர்த்தி பேராசிரியர் நாகபர்வதம் முனைவர் மோகன் முனைவர் அழகேசன் உடற்கல்வித்துறை இயக்குனர் முனைவர் லூர்துராஜ் மற்றும் தேசிய மாணவர் படை அதிகாரி முனைவர் மாரி செய்திருந்தனர்..





# ஒரு கோடியே நாற்பத்தி ஏழு லட்சம் மதிப்புள்ள 930 செல்போன்கள் மீட்கப்பட்டு உரிய நபர்களிடம் ஒப்படைத்த குமரி மாவட்ட கண்காணிப்பாளர் ஸ்டாலின்

கன்னியாகுமரி, ஆக.12-

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களில் செல்போன் தொலைந்து போனதாக பல்வேறு மனுக்கள் பெறப்பட்டது. அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர். இரா.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

உத்தரவின்படி சைபர் பிரிவு போலீசார் காணாமல் போன செல்போன்களை கண்டுபிடித்து மீட்கும் பணியில் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

தொடர் நடவடிக்கையால் தற்போது சுமார் 43,50,000 ( நாற்பத்து மூன்று லட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய்) மதிப்புள்ள 290 செல்போன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்களை மாவட்ட காவல் எது. மேற்படிகண்டுபிடிக்கப்பட்ட செல்போன் கண்காணிப்பாளர் உரிய நபர்களிடம் நேற்று 0908 25 பொதும க்களிடம் ஒப்படைத்தார்கள்மேலும் செல்போன் காணாமல் போனதாக பெறப்பட்ட மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த வருடத்தில் மட்டும் இதுவரையிலும் 1,47,57,000/சுமார் ( கோடியே நாற்பத்தி ஏழு

இலட்சத்து ஐம்பபத்தி ஏழாயிரம் ரூபாய்) மதிப்புள்ள 930 செல்போன்கள் கண்டுபிடிக்கப்பட்டு உரிய நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் தங்களுடைய செல்போன் தொலைந்து போனால் அருகிலுள்ளகாவல்நிலையத்தில் உடனடியாக மனு அளிக்க வேண்டும் அல்லது Tam il-Nadu Police Citizen Portal https://eservices.lnpolice.gov.in) என்ற காவல் துறை

இணையதளத்திலும் தங்களது புகாரை பதிவு செய்யலாம்.

CEIR Portal (https://www. ceir.gov.in/) யதளத்தில் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட மனு ரசீதை பதிவேற்றம் செய்து தவறவிட்ட செல்போனை நீங்களே Block செய்திட முடி யும் வழிப்போக்கு நபரிடமோ சரியான பில் இன்றியோ செல்போன் வாங்க வேண்டாம் ஏனெனில் ஏனெனில் அந்த செல்போன்குற்ற சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். எண் பொதுமக்கள் சைபர் குற்றங்களால் பணத்தை இழந்தால் தாமதிக்காமல் உடனடியாக 1930 ணிற்கு அழைத்து புகார் அளிக்க வேண்டும், என மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர் கூறினார்.



# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி

சிவகங்கை, ஆக.12-

தமிழக அரசின் ஆணைக்கிணங்க அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் போதைப் பொருள் ஒழிப்பு குழுவின் சார்பாக மாபெரும் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி கல்லூரியின் உமையாள் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமை வகித்து போதைப் பழக்கத்தினால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறி, போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியை வாசித்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட கல்லூரியின் மாணவ மாணவிகள், போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன் என்றும் போதைப் பழக்கத்திற்கு ஆளாக மாட்டேன் என்றும் தன் குடும்பத்தினரையும் நண்பர்களையும் போதை பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன் என்றும் போதைப் பழக்கத்திற்கு ஆளானவர்களை மீட்டு எடுத்து அவர்களை நல்வழிப்படுத்த தமது பங்களிப்பை முழுமையாகத் தருவேன் என்றும் போதைக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசோடு துணை நின்று மாநிலத்தின் வளர்ச்சியில் பங்கெடுப்பேன் என்றும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். உமையாள் அரங்கம் மற்றும் அனைத்து வகுப்பறைகளிலும் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை கல்லூரியின் போதைப் பொருள் ஒழிப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்களும், மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்ட காவல்துறையில் முதிர்ந்த மற்றும் உதிரா நிலையில் உள்ள காவல் வாகனங்களை பொது ஏலத்தில் ஏலம் விடப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது மேலும் 21/08/2025 அன்று சிவகங்கை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற உள்ளது ஏலம் எடுக்க விருப்பமுள்ளவர்கள் 21/08/2025 அன்று காலை 6 மணி முதல் 10 மணி வரை 1000/ முன்வைப்பு தொகையினை செலுத்தி ஏலம் எடுக்க தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் தெரிவித்துள்ளார்.





# கீழக்கோட்டையில் போதைப்பொருட்கள் இல்லா தமிழ்நாடு என்ற உறுதிமொழி ஏற்பு

காளையார் கோவில், ஆக.12-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக் கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் போதைப்பொருள்கள் இல்லா தமிழ்நாடு என்ற உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. தமிழ்நாடு போதைப் பொருட்கள் நுண்ணறிவு பிரிவின் முன்னெடுப்பில் தமிழகத்தில் உள்ள பள்ளி கல்வித்துறை மற்றும் தொடக்கக்கல்வி துறையில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் போதைப்பொருள்கள் இல்லா தமிழ்நாடு என்று உறுதிமொழி ஏற்பு நிகழ்வானது சிறப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெறுகிறது. அதன் தொடர்ச்சியாக இந்நிகழ்விற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் தெய்வானை தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியர் மீனாட்சி முன்னிலை வகித்தார். ஆசிரியை வாசுகி வரவேற்புரை ஆற்றினார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி போதை பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்தும் போதைப் பொருட்களின் உற்பத்தி நுகர்வு பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுடன் உறுதுணையாக இருக்க வேண்டும். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நாம் துணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கணினி பயிற்றுனர் வித்யா போதைப்பொருட்கள் இல்லா தமிழ்நாடு என்ற உறுதிமொழியை கூற ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். ஆசிரியை கமலம்பாய் வாழ்த்துரை வழங்கினார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார்.





■ சிவகங்கை அரண்மனைவாசல் முன்பு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஒருங்கிணைத்த மாவட்டம் சார்பாக ஆணவ படுகொலைக்கு எதிராக தனியாக தனி சட்டம் இயற்றக்கோரி தமிழக அரசை வலியுறுத்தி மாபெறும் கண்டண ஆர்ப்பாட்டம் நேற்று நடைப்பெற்றது.தலைமை தெற்கு மாவட்ட செயலாளர் வே.பாலையா வடக்கு மாவட்ட செயலாளர் சி.சு.இளையகௌதமன் முன்னிலை மாவட்ட பொருளாளர் பாஸ்கரன் மாவட்ட செய்தித்தொடர்பாளர் மூ.ஆதிவளவன் மாநில நிர்வாகிகள் அ.முத்துராசு செ.பெரியசாமி திருமொழிஅன்பழகன் வழ.அய்யனார் கல்லல். ஆதித்யன் கண்டன உரை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கலைவேந்தன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ராமதாஸ் கண்ணன் விஜயன் கார்த்திக் சதிஸ்வளவன் கிருஷ்ணமூர்த்தி முனிஸ்வரன் ஜேம்ஸ்வளவன் அழகரசன் சின்னத்துரை சேட்டு கார்த்திக் வழ.பாலமுருகன் முத்துராக்கு உதயக்குமார் சிவாபகத்சிங் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





# பழனியில் தமிழ் புலிகள் கட்சியின் சார்பில் ஆணவ படுகொலைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல், ஆக.12-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழ் புலிகள் கட்சியின் சார்பில், தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுக மங்கலத்தில் பொறியாளர் கவின் குமார் ஆணவ படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும் , ஆணவ படுகொலைக்கு எதிராக தமிழக அரசு தனிச் சட்டம் இயற்ற கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னதாக இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ் புலிகள் கட்சியின் மாவட்ட செயலாளர் இரணியன் தலைமை தாங்க ,இந்திய தேசிய காங்கிரஸ் ,தமிழர் விடியல் கட்சி ,இந்திய குடியரசு கட்சி, ஆதித்தமிழர் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் தோழமைக் கட்சியின் பொறுப்பாளர்கள் என பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, உடனடியாக ஆணவ படுகொலைகளுக்கு எதிராக தமிழக அரசு தனிச் சட்டம் இயற்ற வேண்டும் என கோஷங்களை எழுப்பியவாறு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 9,200 கனஅடியாக சரிவு



மேட்டூர், ஆக.12-

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 9,200 கனஅடியாக சரிந்துள்ளது. அணைக்கு நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 13,483 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 9,200 கனஅடியாக குறைந்தது.

அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு 14,000 கனஅடி, கால்வாய் பாசனத்துக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணை நீர்மட்டம் நேற்று 118.54 அடியாகவும், நீர் இருப்பு 91.16 டிஎம்சியாகவும் இருந்தது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் விநாடிக்கு 9,500 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று மாலை 8,000 கனஅடியாக குறைந்தது.




# பெருங்களத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்கும் அல்பெண்டசோல் மாத்திரைகளை வழங்கினார்

பெருங்களத்தூர், ஆக.12-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 4வது மண்டலம் 56வது வார்டு பெருங்களத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாளினை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், மாணவ மாணவியர்களுக்கு குடற்புழு நீக்கும் அல்பெண்டசோல் மாத்திரைகளை வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், மண்டலக் குழுத் தலைவர் டி.காமராஜ், மாநகர் நல அலுவலர் மருத்துவர் ச.பொற்செல்வன், மண்டல துணை ஆணையர் செந்தில் இரத்தினம் மாமன்ற உறுப்பினர் சி.சேகர், பி.புகழேந்தி, மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி பொது சுகாதார ஊழியர்கள் பள்ளி மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161